நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**அணை நீர்மட்டம்**

First Published : 29 Sep 2010 09:04:39 AM IST

மைசூர் கேஆர்எஸ் அணை நீர்மட்டம்:

மொத்த உயரம்: 124.80 அடி

செவ்வாய்க்கிழமை நீர்மட்டம்: 120.25 அடி

அணைக்கு நீர்வரத்து: 8,736 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 5,754 கன அடி.

கபினி அணை நீர்மட்டம்:

மொத்த உயரம்: 2,284 அடி (கடல்மட்ட அளவு)

செவ்வாய்க்கிழமை நீர்மட்டம்: 2277.71 அடி

அணைக்கு நீர்வரத்து: 2,226 கன அடி

வெளியேற்றப்படும் நீர்: 900 கனஅடி

**கோவை விவசாய கண்காட்சிக்கு 100 விவசாயிகளை அழைத்துச் செல்லத் திட்டம்**

First Published : 28 Sep 2010 01:12:38 PM IST

நாகப்பட்டினம், செப். 27: கோவையில் நடைபெறும் 10-வது மண்டல விவசாயக் கண்காட்சிக்கு நாகை மாவட்ட விவசாயிகள் 100 பேரை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் தங்க. தாமோதரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய வேளாண் அமைச்சகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் கோவை கொடிசியா தொழில்காட்சி வளாகத்தில் வரும் 30-ம் தேதி முதல் அக். 3 வரை தென் மாநிலங்கள் அளவிலான 10-வது மண்டல விவசாயக் கண்காட்சி நடைபெறுகிறது.

இதில் விவசாயத்தைச் சுலபமாக்கும் இயந்திர வகைகள், உபகரணங்கள், நவீன நீர்ப்பாசனக் கருவிகள், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், உணவு தயாரிக்கும் இயந்திரங்கள், கோழி வளர்ப்புக்குத் தேவையான உணவு, மருந்து மற்றும் உபகரணங்கள், வீரிய ரக கால்நடைகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. மேலும், நவீன, சுலப வேளாண் உத்திகளை விளக்கும் கருத்தரங்கங்களும் நடைபெறுகின்றன.

கண்காட்சியின் முதல் 2 நாள் நிகழ்ச்சிக்கு நாகை மாவட்டத்திலிருந்து 100 விவசாயிகளை அழைத்துச் செல்ல சிக்கல் வேளாண் அறிவியல் நிலையம் திட்டமிட்டுள்ளது.

கண்காட்சியில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் பேருந்துக் கட்டணத்தில் ஒரு பகுதியாக | 200 செலுத்தி, செப். 28 மாலை 5 மணிக்குள் தங்கள் பெயரை சிக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் பதிவு செய்யலாம்.

**விவசாயிகளுக்கு மின் வட்ட மேற்பார்வைப் பொறியாளர் வேண்டுகோள்**

First Published : 28 Sep 2010 12:40:31 PM IST

சிவகங்கை,செப்.27: சிவகங்கை மாவட்டப் பகுதிகளில் விவசாயம் செய்யும் விவசாயிகள் இருமுனை மின்சார நேரங்களில் பம்பு செட் மோட்டார்களைப் பயன்படுத்தக்கூடாது என மின்பகிர்மான மேற்பார்வைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

விவசாய மின்இணைப்புக்களுக்கு பகலில் 6 மணி நேரமும், இரவு 3 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கப்படும். மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரை பம்பு செட் மோட்டார்களைப் பயன்படுத்தக்கூடாது.

விவசாய மற்றும் பம்பு செட் பகுதிகளுக்கு மின்விநியோகம் நிறுத்தப்படும் விவரம்:

எஸ்.புதூர், மேலவண்ணாயிருப்பு, உலகம்பட்டி, புழுதிப்பட்டி, ஒக்கூர், ஏரியூர், அலவாக்கோட்டை, அழகமானேரி, திருமலை, மதகுப்பட்டி, காடனேரி ஆகிய பகுதியில் பகல் 12 மணி முதல் மாலை 2 மணி வரை மின்விநியோகம் நிறுத்தப்படும்.

அல்லிநகரம், நயினார்பேட்டை, செங்குளம், அரசனூர், திருமாஞ்சோலை, படமாத்தூர், மைக்கேல்பட்டணம், கானூர், இடையமேலூர், மலம்பட்டி, தமறாக்கி, அ.தெக்கூர், திருப்பாச்சேத்தி, கொத்தங்குளம், முறையூர், நெற்குப்பை, சோழபுரம், நாலுகோட்டை, ஆகிய பகுதியில் காலை 6 மணி முதல் 8 மணி வரை மின்விநியோகம் நிறுத்தப்படும்.

மறவமங்கலம், கொல்லாவயல், சாலைக்கிராமம், வண்டல் ஆகிய பகுதிகளில் மாலை 4 மணி முதல் 6 மணி வரை மின்விநியோகம் நிறுத்தப்படும்.

இதில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சுழற்சி முறையில் மாற்றியமைக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

**தேனீ வளர்ப்புப் பயிற்சி தொடக்கம்**

First Published : 28 Sep 2010 02:31:44 PM IST

கிருஷ்ணகிரி. செப். 27: கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் வேளாண் மண்டல ஆராய்ச்சி மையத்தில் மகளிருக்கான 3 நாள் தேனீ வளர்ப்பு பயிற்சி முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.

நபார்டு வங்கி உதவியுடன் நடைபெறும் முகாமைத் தொடங்கி வைத்து, ஆராய்ச்சி மையத் தலைவர் ஆ.கு.மணி பேசியது:

தமிழ்நாட்டில் தேனீ வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு குறைவாக உள்ளது. இதனை மேம்படுத்துவதற்காக பல்வேறு மாவட்டங்களிலிருந்து நபார்டு வங்கியால் தேர்வு செய்யப்பட்ட 25 மகளிருக்கு இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

தேனீக்களின் வகைகள், குடும்பம், வாழ்க்கை முறை, சமுதாயப் பண்புகள், தேனீ வளர்ப்பை தொடங்குவதற்கு முன் கவனிக்க வேண்டியவை, வளர்ப்புச் சாதனங்கள், பராமரித்தல், பாதுகாத்தல், தேனீக்களுக்கு உணவு தரும் பயிர்கள், பயிர் மகசூலில் தேனீக்களின் பங்கு, தேனீன் தரம், பயன்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் உள்ளிட்டவை பயிற்சி அளிக்கப்படுகிறது.

முதல் இரு நாள்கள் உள் அரங்கப் பயிற்சியாகவும், மூன்றாவது நாள் வயல்வெளிப் பயிற்சியாகவும் நடைபெறும் என்றார் மணி. நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் உதவி பொதுமேலாளர் வி.திருமலை, சேலம் காதி மற்றும் கிராமத் தொழில் வாரிய தேனீ வளர்ப்பு மேலாளர் ஜெ.பாலசுப்பிரமணியன், பேராசிரியர் நா.தமிழ்ச்செல்வன், உதவி பேராசிரியர் ந.வடிவேல் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**வண்ண மீன் குளம் அமைக்க மானியம்**

First Published : 28 Sep 2010 12:20:08 PM IST

தேனி, செப். 27: தேனி மாவட்டத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தில் வண்ண மீன் குளங்கள் அமைப்பதற்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து, வைகை அணை மீன் வள உதவி இயக்குநர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தேனி ஆறு உபவடி நிலப் பகுதிகளில் 2010-11-ம் ஆண்டுக்கு வண்ண மீன் குளங்கள் அமைத்துச் செயல்படுத்துவதற்கு அரசு | 1.50 லட்சம் மானியம் வழங்குகிறது.

ஆர்வமுள்ள மீனவர்கள் வைகை அணை மீன் வள உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

**காளான் வளர்ப்புப் பயிற்சி**

First Published : 28 Sep 2010 01:12:23 PM IST

நீடாமங்கலம், செப். 27: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் காளான் வளர்ப்புப் பயிற்சி நான்கு நாள்கள் நடைபெற்றது.

நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் மு. ராமசுப்பிரமணியன், கு. சுதாகர், கை. குமணன், ச. அனந்தகிருஷ்ணவேணி, மெ. செந்தில்குமார், ப. கீதா, திட்ட உதவியாளர் தெ. ரேகா உள்ளிட்டோர் பயிற்சியளித்தனர்.

வைக்கோல் தயாரித்தல், காளான் படுக்கை செய்து, அதில் காளான் வித்துகளை வைப்பது போன்றப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. காளான் ஊறுகாய் மற்றும் சூப் தயாரிப்பது குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் இளைஞர்கள் இந்தப் பயிற்சியில் கலந்துகொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம்**

First Published : 28 Sep 2010 11:32:10 AM IST

ஈரோடு, செப். 27: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 71.50 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 2136 கன அடி தண்ணீர் வந்தது. அணையிலிருந்து பாசனத்துக்கு வாய்க்காலில் விநாடிக்கு 2200 கன அடி, ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 11.59 டிஎம்சி.

**நன்செய் நிலங்களில் காற்றாலை: மதிமுக புகார்**

First Published : 28 Sep 2010 01:31:14 PM IST

பாவூர்சத்திரம், செப். 27: பாவூர்சத்திரம் பகுதியில் நன்செய் நிலங்களை அழித்து காற்றாலை நிறுவப்படுவதாக, கீழப்பாவூர் ஒன்றிய மதிமுக செயலர் இராம. உதயசூரியன் மாவட்ட ஆட்சியருக்கு புகார் மனு அனுப்பியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது:

கீழப்பாவூர் ஒன்றிய பகுதிகளில் தனியார் காற்றாலை அமைக்கும் பணிகள் பல்வேறு இடங்களில் நடைபெற்று வருகின்றன.

ஒரு காற்றாலை அமைக்க குறைந்த பட்சம் 1 ஏக்கர் நிலம் என்ற அளவில் விலைக்கு வாங்குகின்றனர்.

இப்படி வாங்கப்படும் நிலம் தரிசு நிலங்களாகவோ, விவசாயப் பயன்பாட்டிற்கு தகுதியற்ற நிலங்களாகவோ இருந்தால் யாருக்கும் பாதிப்பு இல்லை.

ஆனால், இங்கு காற்றாலை அமைக்கும் நிறுவனத்துக்கு இடைத்தரகர்களாக உள்ளவர்கள், நல்ல தண்ணீர் வசதியோடு விவசாயம் நடைபெற்று வரும் இடங்களைத் தேர்வு செய்கிறார்கள்.

விவசாயிகளும் பணத்தேவையின் நிமித்தம் நன்செய்,புன்செய் நிலங்களை விற்று வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் இப் பகுதியில் விவசாய நிலங்களே இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்றார் அவர்.

தினமலர்

**மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:51 IST

டி.என்.பாளையம்: டி.என்.பாளையம் வேளாண் விரிவாக்க மையம் சார்பில் மண் புழு உரம் தயாரிப்பு பயிற்சி நடந்தது.தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மண் புழு உரம் உற்பத்தி செய்யும் குடில் அமைக்க 32 ஆயிரத்து 500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. டி.என்.பாளையம் யூனியனில் சென்றாண்டு 14 குடில்கள் அமைக்கப்பட்டு, சிறப்பான முறையில் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்படுகிறது. தொடர்ச்சியாக இந்த ஆண்டும் மண் புழு உரம் உற்பத்தி செய்யும் குடில் அமைத்து மண்புழு உரம் தயாரிப்பது குறித்து 50 விவசாயிகளுக்கு கொங்கர் பாளையத்தில் பயிற்சி நடந்தது. வேளாண் அலுவலர் சரோஜா பயிற்சியளித்தார்.

**விவசாய கண்காட்சிக்கு கோபி விவசாயிகள் பயணம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:50 IST

கோபிசெட்டிபாளையம்: கோவையில் நடக்கும் தென்மண்டல விவசாயக் கண்காட்சிக்கு கோபி மற்றும் சத்தி உழவர்சந்தையை சேர்ந்த விவசாயிகள் வரும் 1ம் தேதி சுற்றுலா செல்கின்றனர்.தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் மற்றும் ஆந்திரா மாநிலங்களை உள்ளடக்கிய தென் மண்டல விவசாய கண்காட்சி கோவை கொடிசியா வளாகத்தில் நாளை துவங்குகிறது. வரும் 3ம் தேதி முதல் நான்கு நாட்கள் நடக்கும் கண்காட்சியை மாநில வேளாண்மை துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைக்கிறார். நான்கு மாநிலங்களில் இருந்து 200 ஸ்டால்கள் அமைக்கப்படுகிறது. புதிய பயிர் ரகங்கள், நவீன விவசாய தொழில் நுட்ப கருவிகள், பண்ணை எந்திர கருவிகள், உரங்கள் பற்றிய தகவல் இடம் பெறுகிறது.கோபி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் கார்த்திகேயன் கூறியதாவது: இக்கண்காட்சிக்கு சத்தி மற்றும் கோபி உழவர் சந்தை விவசாயிகள் வரும் 1ம் தேதி அழைத்து செல்லப்படுகின்றனர். இதன் தொடர்ச்சியாக அறுவடைக்கு பின் நேர்த்தி செய்தல் குறித்த இரண்டு நாள் பயிற்சி தொடர்ந்து நடக்கிறது.

பயிர் சாகுபடி செய்வது விவசாயிகள்: அறுவடை செய்கின்றன பறவைகள்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,00:31 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சி பகுதியில் விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களை மயில், பச்சைக்கிளி போன்ற பறவைகள் அறுவடை செய்து விடுவதால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகிறது என்று புகார் செய்தனர்.பொள்ளாச்சி சப்-கலெக்டர் அலுவலகத்தில் வருவாய் கோட்டாட்சியர் அழகிரிசாமி தலைமையில் விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தில் ரோட்டோரம் மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலங்களை சுத்தம் செய்வதால், கால்நடைகளுக்கு இயற்கையாக கிடைக்கும் தீவனத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுகிறது.விவசாயிகளிடம் இருந்து தண்ணீர் தீர்வையாக வசூலித்த தொகையில் ஒரு பகுதியை பாசன சபைகளிடம் ஒப்படைக்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்தது. நீண்ட காலமாக நிலுவையில் இருக்கும் இந்த பிரச்னைக்கு தீர்வு கண்டால் தான், கால்வாய் பராமரிப்பு பாசன சங்கங்களுக்கு நிதி ஆதாரம் கிடைக்கும்.மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் சர்க்கார்பதியில் இருந்து உப்பாறு வரையிலும் யானைகளின் தொந்தரவு அதிகமாக உள்ளது. விவசாய நிலத்தில் புகுந்து தென்னை உள்ளிட்ட அனைத்து பயிர்களையும் சேதப்படுத்துகிறது.

மின்வேலி அமைத்தால் அதையும் யானைகள் உடைத்து விடுகின்றன.வனப்பகுதியை ஒட்டிய பகுதிகளில் அரசு சார்பில் மின்வேலி அமைக்க வேண்டும் அல்லது அகழி அமைத்து விவசாய நிலத்திற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும்.பொள்ளாச்சி தாலுகாவில் விவசாய பகுதிகளில் மயில், பச்சைக்கிளி போன்றவை அதிகளவில் உள்ளன. தானியங்கள் விளைந்ததும் மயில், பச்சைக்கிளி போன்றவை சாப்பிட்டு சேதப்படுத்துகின்றன. விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்களை பறவைகள் அறுவடை செய்து விடுகின்றன. அவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.பி.ஏ.பி., திட்டத்திற்கு உட்பட்ட பாசன கால்வாய் எல்லைகள் அளவிடப்படாமல் உள்ளது. கால்வாயை ஒட்டியுள்ள நிலங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பு நிலத்தை மீட்க எல்லைக்கற்கள் நட்டு பராமரிக்க வேண்டும். தேவம்பாடிவலசு கிராமத்தில் அறநிலையத்துறைக்கு சொந்தமான நான்கு ஏக்கர் தரிசு நிலம் உள்ளது.

அந்த நிலத்தில் துணை மின்நிலையம் அமைக்க வேண்டும். பட்டா மாறுதலுக்கு முறையான ஆவணங்களுடன் விண்ணப்பித்தாலும் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர். தேசிய வேலை உறுதியளிப்பு திட்டத்தில் விவசாய பணிகளும் மேற்கொள்ள வேண்டும்.பொள்ளாச்சியில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் மழைமானி வைத்து, அதில் பதிவாகும் மழையளவுக்கு ஏற்ப நிவாரண தொகை வழங்கப்படுகிறது. ஆழியாறு அணையில் இருந்து அக்., 2ம் தேதி முதல் தண்ணீர் திறக்கப்படுகிறது. தண்ணீர் திறக்கும் காலஅளவை குறைத்துள்ளனர். பழைய

முறைப்படி 90 நாட்களுக்கு குறையாமல் தண்ணீர் வழங்க வேண்டும்.இவ்வாறு விவசாயிகள் பேசினர்.அதிகாரிகள் கூறியதாவது:விவசாயிகளிடம் இருந்து தண்ணீர் தீர்வை வசூலிக்க வேண்டாம் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. இதுவரை வசூலித்த பணத்தை பகிர்ந்தளிப்பது பற்றி மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந் துரை செய்யப்படும். விவசாய பயிர்களை காட்டு யானை சேதப்படுத்துவதை தடுக்க சோலார் மின் வேலி, அகழி போன்றவை அமைக்கவும், கும்கி யானைகள் கொண்டு அவற்றை திரும்ப வனத்திற்குள் விரட்டவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாய பகுதியில் மயில்கள் அதிகரிப்பதை தவிர்க்க விவசாயிகள் புதர்களை அழிக்க வேண்டும். அவற்றின் பெருக்கத்தை தடுப்பது பற்றி வனத்துறையினர் ஆய்வு செய் வார்கள். மயில், பச்சைக்கிளிகளை விவசாயிகள் துன்புறுத்தக்கூடாது.தேவம்பாடிவலசு கிராமத்தை சுற்றியுள்ள பகுதியில் அரசு புறம்போக்கு நிலம் இருந்தால் துணைமின் நிலையத்திற்கு வழங்கப்படும். இலவசமாக இடம் கிடைக்காவிட்டால் மின்வாரியம் மூலம் நிலம் எடுப்பு செய்யப்படும்.வட்டார அளவில் ஆறு லட்சம் ரூபாய் செலவில் மழைமானி வைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி அளவில் மழைமானி வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆழியாறு அணையின் நீர் இருப்பு நிலவரத்தை பொறுத்து பாசனத்திற்கு முழுமையாக தண்ணீர் வழங்கப்படும் என்றனர்.

**விவசாயத்தில் கருவிகளை பயன்படுத்த வேண்டும்: வேளாண் பல்கலைதுணைவேந்தர் பேச்சு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,20:50 IST

விருத்தாசலம் : விவசாயத்தில் ஆட்கள் பற்றாக்குறை இருப்பதால் கருவிகளை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும் என வேளாண் பல்கலைக் கழக துணைவேந்தர் கூறினார்.விருத்தாசலம் வேளாண்மைப் பல்கலைக் கழக அறிவியல் நிலையத்தில் 16வது அறிவியல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்தது.  வேளாண்மை இணை இயக்குனர் இளங்கோவன், நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ஜெயராஜ், விரிவாக்கக் கல்வி இயக்குனர் கதிரேசன், கலைச் செல்வன் முன்னிலை வகித்தனர். திட்ட ஒருங்கிணைப்பாளர் சுப்ரமணியன் வரவேற்றார்.தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கி பேசியதாவது:தமிழகத்தில் செம்மை நெல் சாகுபடித் திட்டம் சிறப்பானதாகும். இத்திட்டத்தின் மூலம் 15 லட்சம் எக்டேரில் நெல் பயிரிட்டால் 150 லட்சம் டன் விளைச்சல் பெற வாய்ப்பு உள்ளது. விவசாயிகள் இத்திட்டத்தை செயல்படுத்த வேளாண் அறிவியல் நிலையம் உதவி செய்து தொழில் நுட்ப முறைகளை கற்றுத் தரும்.கரும்பு சாகுபடியில் தமிழகம் முதன்மையாக விளங்குகிறது. வேளாண் துறையில் இயந்திரமயமாக்கல் அவசியம். உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாட்டில் நாம் இரண்டாம் இடத்தில் இருக்கிறோம். இருந்தும்

விவசாயக் கூலி வேலை செய்ய ஆட்கள் இல்லை.வேளாண் அறிவியல் நிலையம் மூலம் களை எடுத்தல் உள்ளிட்ட 192 விவசாயக் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதற்கான செயல் திட்டங்களை தனியார் நிறுவனங்கள் வாங்கி கருவிகளை தயார் செய்கின்றன.விவசாயிகள் இந்தக் கருவிகளை பயன்படுத்தி ஆட்கள் பற்றாக்குறையை சரி செய்து விவசாய உற்பத்தியை பெருக்க வேண்டும். விவசாயிகள் தொழில் நுட்பங்களை கற்று பயன்படுத்த 2 லட்சம் பக்கங்கள் கொண்ட வேளாண் இணைய தளம் உருவாக்கப்பட்டுள்ளது.இவ்வாறு துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

**வீராணம் பாசன பகுதிகளில் சம்பா நடவு பணி துவங்கியது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,20:49 IST



காட்டுமன்னார்கோவில் :காட்டுமன்னார்கோவில் வடவாறு மற்றும் வீராணம் பாசன பகுதிகளில் சம்பா நெல் நடவு பணி துவங்கியது.காவிரி கடைமடையான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதி விவசாயிகள் மேட்டூர் தண்ணீரை நம்பியே பயிர் செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்த ஆண்டு மேட் டூர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் குறைந்த அளவே தண்ணீர் வந்தது.எப்போதும் 8 அடி நிரம்பும் கீழணை 5 அடி மட்டுமே நிரம்பியது. விவசாயிகளின் தேவை கருதி ஆகஸ்ட் மாதம் 11ம் தேதி கீழணையில் இருந்து வீராணத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. ஆரம்பத்தில் குறைவாக திறக்கப்பட்ட தண்ணீர் வடவாறு விவசாயிகளுக்கே போதாத நிலையில் வீராணம் வந்து சேர்வதில் சிக்கல் ஏற்பட்டது.அடுத்த சில நாட்களில் பெய்த மழையால் வடவாற்றின் வழியாக விராணம் ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. அதற்குள்ளாகவே மோட்டார் வசதி உள்ள வடவாற்றங் கரை, வீராணம் பாசன விவசாயிகள் உழவு ஓட்டி தயார் நிலையில் இருந்தனர். வீராணம் ஏரியின் நீர் மட்டம் உயர்ந்தவுடன் 3ம் தேதி பாசனத் திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற் போதைய நிலையில் 669 கன அடி தண்ணீர் பாசனத்திற்காக

வழங்கப் பட்டு வருகிறது.அதனைத்தொடர்ந்து வடவாறு மற்றும் வீராணம் பாசன விவசாயிகள் சம்பா நடவு பணியில் தீவிரம் காட்டி வந்தனர். உழவு பணிகள் முடிந்த நிலையில் தற்போது நாற்று நடும் பணியை துவங்கியுள்ளனர். குறிப்பாக வடவாற்றங்கரை பகுதிகளான கஞ்சங்கொல்லை, ஷண் டன், ஈச்சம்பூண்டி, சிறுகாட்டூர், பூவிழந்தநல்லூர், ரங்கநாதபுரம், கண்டமங்கலம் உள்ளிட்ட 20க்கும் மேற் பட்ட கிராமங்களிலும், வீராணம் பாசன பகுதிகளான குமராட்சி, திருநாரையூர், சிறகிழந்தநல்லூர், மேலபருத்திக்குடி, கீழப்பருத்திக்குடி, மெய்யத்தூர், புத்தூர், உத்தமசோழகன், லால்பேட்டை உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாய பணிகள் நடந்து வருகிறது.

**தானிய பாதுகாப்பு முறைகள்: விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,02:58 IST

சிதம்பரம்: விளை பொருட்களை பாதுகாப்பாக சேமித்து வைத்து பயன்படுத்த ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளை கடை பிடிக்க வேண்டும் என வேளாண் அலுவலர்கள் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். வேளாண் துணை இயக்குநர் தனவேல், அலுவலர் சித்ரா ஆகியோர்  வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அறுவடையின் போதே பூச்சி தாக்குதலில் இருந்து விளை பொருட்களை பாதுகாத்தல் அவசியம். விளை பொருட்களின் ஈரத்தன்மையை சரியான அளவில் பராமரிக்க வேண்டும். விளை பொருட்கள் காய வைக்கும் களங்கள், கோணிப் பை, குதிர்கள், தூர்தால் மற்றும் கிடங்குகள் ஆகியவற்றில் பூச்சி கொள்ளி மருந்து தெளிக்க வேண்டும். ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முறைகளை கையாள்வது, பூஞ்சான் தாக்குதலில் இருந்து தடுக்க மாலத்தியான் 0.1 சதவீதம் தெளிப்பது போன்ற ஒருங்கிணைந்த தானிய பாதுகாப்பு முறைகளை கையாண்டு பயன்பெறலாம் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் தனியாரிடம் ஒப்படைக்க எதிர்ப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,02:52 IST

சிதம்பரம்: கிராம அளவிலான வேளாண் பயிர் காப்பீட் டுத் திட்டத்தை தனியாரிடம் ஒப்படைக்க தமிழக உழவர் முன்னணி எதிர்ப்பு தெரிவித் துள்ளது. தமிழக உழவர் முன் னணி கடலூர் மாவட்ட செயலாளர் ஆறுமுகம் விடுத்துள்ள அறிக்கை: கிராம அளவில் வேளாண் பயிர் காப்பீட் டுத் திட்டத்தை சில மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனம் முன்வந் துள்ளது. ஏக்கர் வாரியாக பயிர் காப்பீடு செய்ய வேண் டும் என தமிழக உழவர் முன்னணி வலியுறுத்துகிறது. இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து மாவட் டங்களுக்கும்

விரிவுபடுத்தப்பட வேண்டும். இக்காப்பீட்டுத் துறையில் தனியாரை அனுமதிக்கக் கூடாது.\ இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**ஒரே மாதத்தில் விற்பனைக்கு தயாராகும் ஜப்பானிய காடை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2010,02:17 IST

திருப்பூர்: ஒரே மாதத்தில் விற்பனைக்கு தயாராகும் ஜப்பானிய காடை வளர்ப்புக்கு, கால்நடைத்துறை உதவ வேண்டுமென பயனாளிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழகத்தில் சில மாவட்டங்களில் மட்டுமே ஜப்பானிய காடை வளர்ப்பு முறை பிரபலமாகியுள்ளது. கிராமப்புறத்தினர், வறுமைகோட்டுக்கு கீழுள்ளவர்களுக்கு அதிக லாபம் தரக்கூடிய ஜப்பானிய காடை வளர்ப்பு முறை எளிதில் பயனாளிகளிடம் சென்றடைய கால்நடைத்துறை முயற்சிக்க வேண்டும். தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் மட்டுமே காடை வளர்ப்பு பண்ணைகள் உள்ளன. இதில், மொத்தம் ஆறு வகை இனங்கள் உள்ளன. இவை நிறம் மற்றும் எடையில் வேறுபாடும்; ஆனால், வளர்ப்பு முறை ஒரே மாதிரியானவை. குறைந்த இடத்தில் (ஒரு சதுர அடிக்கு ஐந்து காடை) அதிக எண்ணிக்கையில் ஜப்பானிய காடைகளை வளர்க்கலாம். மற்ற கால்நடை வளர்ப்பைபோல், அதிக முதலீடு செய்ய தேவையில்லை.

இவற்றுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகம். எனவே, தனியாக நோய் தடுப்பு முறை அவசியமில்லை. இவற்றை எந்தவொரு தட்பவெப்ப நிலையிலும் வளர்க்க முடியும். ஒவ்வொரு காடையும் அதிகபட்சமாக ஆறு வாரத்தில் விற்பனைக்கு தயாராகிறது. சராசரியாக ஆண் காடை 200 கிராம், பெண் காடை 190 முதல் 210 கிராம் இருக்கும். இனப்பெருக்கம் ஏழாவது வாரத்தில் நடக்கும். மாலை நேரத்தில் மட்டுமே முட்டையிடும். ஒரு காடை, நாளொன்றுக்கு குறைந்தது நான்கு முட்டைகள் இடும்.
குளிர்ந்த சீதோஷ்ண நிலையில் மட்டுமே அதிக முட்டைகளை இடும். காடை குஞ்சுகள் பிறக்கும்போது வெறும் 10 கிராம் தான் இருக்கும். எனவே, குஞ்சுகளை "புரூடர்' வெப்பம் மூலம் சூடான வெப்ப நிலையில் வைத்திருக்க வேண்டும். இல்லையெனில், மூச்சுத் திணறல் ஏற்பட்டு இறந்து விடும். காடை இறைச்சியில் அதிக புரதச்சத்து இருப்பதால், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்களுக்கு ஏற்றது. ஒரு காடையை வளர்க்க ஏழு ரூபாய் செலவாகிறது. ஒரு காடை குஞ்சு இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தீவனத்துக்கு ஐந்து ரூபாய் செலவாகிறது. மொத்தமாக ஒரு காடையை ஏழு ரூபாய்க்கு உற்பத்தி செய்து, ஒன்பது ரூபாய்க்கு விற்பனை செய்யலாம்.

முட்டைக்காக அல்லாமல் இறைச்சிக்காக விற்பனை செய்தால் அதிக லாபம் பெறலாம். புரதச்சத்து அதிகமாகவும், சுவை மிகுந்தும் இருப்பதால் வெளி மாவட்டங்களில் இதன் விற்பனை அதிக அளவில் நடக்கிறது. இத்தகைய காடை வளர்ப்புக்கு தேவையான சீதோஷ்ண நிலை, ஈரோடு, கோவை, திண்டுக்கல், திருப்பூர் உள்ளிட்ட தென்மாவட்டங்களில் இருப்பதால், ஜப்பானிய காடை வளர்ப்பு முறையை ஊக்குவிக்க வேண்டும்.

தற்போது, இம்மாவட்டங்களில் வெள்ளாடு வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு முகாம்களே அதிக அளவில் நடத்தப்பட்டு வருகின்றன. முயல் வளர்ப்பு, காடை வளர்ப்பு குறித்து பயிற்சி முகாம்கள் எதுவும் நடத்துவதில்லை. ஜப்பானிய காடையை குறைந்த முதலீட்டில், எளிதில் வீடுகளில் வளர்த்து வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் பயன்பெற முடியும். எனவே, இத்தகைய காடை வளர்ப்பு முறையை நம் மாவட்டத்திலும் கொண்டுவர கால்நடைத்துறை சார்ந்த அதிகாரிகள் முயல வேண்டும். கால்நடைத்துறை மருத்துவர் ஒருவர் கூறுகையில்,"ஜப்பானிய காடை வளர்ப்பு திட்டம் குறித்த வரையறை, மாநிலத்தில் உள்ள அனைத்து கால்நடை மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தந்த பகுதி பயனாளிகள், அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் தெரிந்து கொள்ளலாம். ஜப்பானிய காடை வளர்க்க  பயனாளிகள் முன்வருவதில்லை,' என்றார்.

**நிலக்கடலை விலை திடீர் சரிவு; அதிகாரிகள் சிறைபிடிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2010,22:34 IST



அவிநாசி : சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக்கடலை ஏலம் நடந்தது; திடீரென்று விலை சரிந்ததை கண்டித்து விவசாயிகள் முற்றுகை போராட்டம் நடத்தினர்; பேச்சுக்கு சென்ற தாசில்தார் சிறைபிடிக்கப்பட்டார்.அவிநாசி அருகே சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந் தோறும் நிலக்கடலை ஏலம் நடக்கிறது. கடந்த மூன்று வாரமாக வரத்து அதிகரித்ததோடு, விலையும் உயர்ந்தது. சேவூரில் நிலக்கடலைக்கு நல்ல விலை கிடைப்பதை அறிந்த வெளியூர் விவசாயிகள் அதிகளவில் வரத்துவங்கினர்.இந்த வாரம் நடந்த ஏலத்துக்கு 750 விவசாயிகள், 8,000 மூட்டை நிலக்கடலையை கொண்டு வந்தனர். வழக்கத்தைவிட வரத்து அதிகமாக இருந்ததால், விலையில் இறக்கம் ஏற்பட்டது. 3,000 மூட்டை ஏலம் முடிந்த நிலையில், விவசாயிகள் திடீரென்று போராட்டத்தில் குதித்தனர்.

"வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து விலையை குறைத்ததாகவும், அதற்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் துணை போனதாகவும் குற்றம்சாட்டி, உரிய விலை கிடைக்கும் வரை ஏலத்தை நடத்த விட மாட்டோம்,' என்று அறிவித்தனர்.அவிநாசி தாசில்தார் கிரிதரன், வருவாய் ஆய்வாளர் பழனிசாமி, கிராம நிர்வாக அலுவலர்கள் பாலு, சுந்தரம், ரங்கசாமி, சிவாஜி ஆகியோர், விவசாயிகள், வியாபாரிகள், ஒழுங்குமுறை விற்பனை கூட அதிகாரிகளிடம் பேச்சு நடத்தினர். எவ்வித முடிவும் ஏற்படாததால், தாசில்தார் உள்ளிட்ட அதிகாரிகளையும், வாகனங்களையும் விவசாயிகள் சிறைபிடித்தனர்.இத்தகவல் அறிந்த சேவூர் போலீசார், ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு சென்று பேசினர். இதில், "கோவை விற்பனைக்குழு தலைவர் முன்னிலையில், நாளை (நேற்று) பேச்சு நடத்தி முடிவு செய்யலாம்' என்று அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அதிகாரிகளை விவசாயிகள் விடுவித்தனர்.

தொடர்ந்து நேற்று காலை 11.00 மணிக்கு கோவை விற்பனைக்குழு தலைவர் நாச்சிமுத்து தலைமையில் முத்தரப்பு பேச்சு நடந்தது.விவசாயிகள் சார்பில் குழந்தையப்பன் பேசுகையில், ""ஏலத்தில் பங்கேற்கும் வியாபாரிகள், அவர்களாகவே ஏலம் கூற வேண்டும். "சிண்டிகேட்' அமைக்காமல் ஏலம் கூறினால், விவசாயிக்கு கொஞ்சம் பணம் கிடைக்கும். மழைக்காலத்தில் நிலக்கடலை நனைந்து விடுவதால் நஷ்டம் ஏற்படுகிறது,'' என்றார்.இதையடுத்து வியாபாரிகளிடம் அதிகாரிகள் பேச்சு நடத்தினர். "வரத்து அதிகமானதால், விலை குறைகிறது. தேவைக்கு அதிகமாக எடுத்து நாங்கள் என்ன செய்வது. கட்டுப்படியான விலைக்கு ஏலம் கூறுகிறோம்,' என்று வியாபாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து அதிகாரிகள் நடத்திய பேச்சால் சுமூக முடிவு ஏற்பட்டு ஏலம் துவங்கியது; நேற்று மாலை வரை ஏலம் நீடித்தது.

**புரட்டாசியால் துளசி விற்பனை "தூள்' முகூர்த்தம் குறைவால் பூ விற்பனை "டல்'**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:08 IST

திருச்சி: புரட்டாசி மாதம் பிறந்ததை ஒட்டி பெருமாளுக்கு உகந்த துளசி விற்பனை திருச்சி காந்தி மார்க்கெட்டில் தூள் பறக்கிறது. முகூர்த்த நாள் குறைவால், மற்ற பூக்களின் விலை வெகுவாக குறைந்துள்ளது.கிருஷ்ணன், பெருமாள், பள்ளிகொண்டவன், நாராயணன் என பல பெயர்களில் அழைக்கப்படும் ஹிந்துக்களின் காக்கும் கடவுளான விஷ்னு பகவானுக்கு துளசி என்றால் அவ்வளவு ப்ரியம்.

விதுரர் முனிவருக்கு சேவை செய்த துளசி என்ற பெண்ணுக்கு மோட்சம் தந்த கிருஷ்ண பகவான், "நான் எங்கிருந்தாலும், என் மீது நீ வாசம் செய்வாய்' என்று கூறினார். மேலும், "நான் துளசியில் வாசம் செய்கிறேன்' என பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறியுள்ளார். இதனால், அர்ச்சனைக்கும், பெருமாளுக்கு மாலை சாற்றவும் துளசி பயன்படுகிறது.விஞ்ஞான ரீதியாக துளசி கிருமி நாசினி, பூச்சிகள் அண்டாது, சளி, இருமல் தொந்தரவுக்கு நிவாரணம் தரும். பெரும்பாலான வீட்டு மாடத்தில் துளசி வளர்க்கப்படுகிறது. புரட்டாசி பெருமாளுக்கு உகந்து என்பதால், துளசி விற்பனை தூள் பறக்கிறது.

திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு வயலூர், குளித்தலை, முசிறி, மணப்பாறை, வையம்பட்டி போன்ற பகுதிகளில் காடு மற்றும் வயல்வெளி ஓரத்திலும் வளரும் துளசியை அறுத்து கொண்டு வரப்படுகின்றன.காந்திமார்க்கெட்டில் 30 ஆண்டாக துளசி விற்பனையில் ஈடுபட்டுள்ள மாரியாயி (70) கூறுகையில், ""இந்த தொழிலில் நான் 30 ஆண்டாக ஈடுபட்டுள்ளேன். காடு, வயலோரங்களில் வளர்ந்திருக்கும் துளசியை அறுத்து வந்து விற்பனை செய்கிறேன். புரட்டாசி, மார்கழி மாதங்களில் துளசிக்கு நல்ல விலை கிடைக்கும். மற்ற நாட்களில் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும் துளசி கட்டு ஒன்று தற்போது 5 முதல் 10 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 300 ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். மற்ற நாட்களில் இவ்வளவு பணம் கிடைக்காது," என்றார்.

புரட்டாசி மாதத்தில் பெரும்பாலும் விசேஷங்கள் வைக்கமாட்டர். தவிர, நடப்பு புரட்டாசி மாதத்தில் முகூர்த்தம் குறைவு என்பதால், பூக்காளின் விலை வெகுவாக குறைந்துள்ளது. நேற்று மாலை நிலவரப்படி பூக்களின் விலை ஒரு கிலோவில், செவ்வந்தி 30, மல்லி 130, விச்சிப்பூ 10, ஜாதி 120, முல்லை 150, சம்மங்கி 20, ரோஸ் 20, அரளி 10, கனகாம்பரம் 150 என விற்பனை செய்யப்பட்டது.

**எள் செடி பாதிப்பு: விவசாயி கவலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:02 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட வயலூர், கருப்பத்தூர், பஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களில் மானாவாரி நிலத்தில் எள் சாகுபடி துவக்கப்பட்டுள்ளது. பருவமழையை எதிர்பார்த்து சாகுபடி துவக்கப்பட்டது. ஆனால், மழை சராசரியாக இல்லாததால், போதிய நீராதாரம் கிடைக்கவில்லை.செடி லேசாக வளர்ந்துள்ள நிலையில் தண்ணீரின்றி காய்ந்து வருவதால், வெட்டு கிளி பூச்சி தாக்கி, உண்டு விடுகிறது. செடி மேற்கொண்டு வளர முடியாத நிலையுள்ளதால், 250 ஏக்கரில் சாகுபடியான எள் செடி முற்றிலும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இதைத் தடுக்க வேளாண் துறை தக்க உதவி செய்ய வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மல்லிகை கிலோ ரூ.300**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:53 IST

மதுரை: மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் மல்லிகை வரத்து குறைந்துள்ளதால், நேற்று கிலோ 300 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற பூ விலை குறித்து, சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது : ஒரு கிலோ கனகாம்பரம் 300 ரூபாய், சம்பங்கி50, ரோஜா 40, அரளி 60, வாடாமல்லி30, கோழிக்கொண்டை 30, செவ்வந்தி 30, கேந்தி 20, மரிக்கொழுந்து 25, பிச்சிப்பூ 250, மெட்ராஸ் மல்லி 650 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார்.

**தொடர் மழை பெய்தாலும் சீரான விலையில் காய்கறி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:53 IST

மதுரை: மதுரையில் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தாலும், முகூர்த்த நாட்கள் அதிகம் இல்லாததால் மாட்டுத்தாவணி சென்ட்ரல் மார்க்கெட்டில் அனைத்து காய்கறிகளும் சீரான விலையில் விற்கப்படுகின்றன. சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது : நேற்று ஒரு கிலோ தக்காளி 10 ரூபாய், உருட்டு தக்காளி 8, கத்தரிக்காய் 10, வெள்ளை கத்தரிக்காய் 7, பூசணிக்காய் 5, சுரைக்காய் 4, புடலங்காய் 8, வெண்டைக்காய் 10, கேரட் 15, பீட்ரூட் 9, முள்ளங்கி 10, நூக்கல் 8, காலிபிளவர் 4-7, முட்டைகோஸ் 7, உருளைகிழங்கு 10-14, சேனைகிழங்கு 25, கருணைகிழங்கு 25, பீன்ஸ் 20, பட்டர் பீன்ஸ் 25, சோயா பீன்ஸ் 25, பட்டாணி 40, இஞ்சி 25, வெங்காயம் 10-15, பாகற்காய் 15, சிறியது 35, கீரை வகைகள் 7, புதினா 20, கொத்தமல்லி 12, கறிவேப்பிலை 15,

முருங்கைக்காய் 20, அவரைக்காய் 15, கொத்தவரை 7, பச்சை மிளகாய் 12, ஆந்திர பச்சை மிளகாய் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார். சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்பந்தமில்லை.

**தீபாவளி வரை அரிசி விலை மாறாது**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:53 IST

மதுரை:"மதுரையில் பல்வேறு பகுதிகளிலிருந்து நெல் வரத்து சீராக உள்ளதால், தீபாவளி பண்டிகை வரை அரிசி விலையில் மாற்றம் இருக்க வாய்ப்பில்லை' என்கின்றனர் வியாபாரிகள். நேற்றைய விலை குறித்து, ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது : கர்நாடக பொன்னி பழசு 38.50 ரூபாய், புதுசு 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு 32.50 ரூபாய்க்கும், புதுசு 25 ரூபாய்க்கும், வெள்ளை பொன்னி பழசு 35.50, புதுசு 27க்கும், செல்லப் பொன்னி பழசு 23.50, புதுசு 21க்கும் விற்கப்பட்டது. ஐ.ஆர். இருபது பழசு 23 ரூபாய், புதுசு 21லிருந்து 22 ரூபாய், ஐ.ஆர். 36 பழசு 22 ரூபாய், புதுசு 20லிருந்து 21 ரூபாய்க்கு விற்கப்பட்டது.
பச்சரிசி சூப்பர் சன்னம் முதல் ரகம் 37 ரூபாய், அடுத்த ரகம் 30, புதுசு 28லிருந்து 29 ரூபாய், மாவு பச்சரிசி பழசு 21, பிரியாணி அரிசி முதல் ரகம் 53, அடுத்த ரகம் 52, 50 ரூபாய்க்கும், புதுசு 46 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது
என்றார். மொத்தம் மற்றும் சில்லரை கடைகளில் ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை மாறுபடுகிறது.

**பன்னீர் திராட்சை சீசன் ஆரம்பிச்சாச்சு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,02:52 IST

மதுரை: பன்னீர் திராட்சை சீசன் ஆரம்பித்துள்ளதால், மதுரைக்கு வரத்து அதிகரித்துள்ளது. சில வாரங்களுக்கு முன் கிலோ 70 ரூபாய் வரை விற்கப்பட்ட நிலையில், நேற்று 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு கிலோ ஆப்பிள் 40 - 90 ரூபாய், காபூல் மாதுளை 50 - 130, சீட்லெஸ் மாதுளை 50 - 100, தில்குஷ் 50, அன்னாசி 25, பப்பாளி 20, சீத்தாப்பழம் 25, சாத்துகுடி 25, கிர்னி 30, மோரீஸ் வாழைப்பழம் 20, பேரிக்காய் 70, மலை வாழைப் பழம் ஒன்று 5 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில கடைகளில் 5 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை விலை வேறுபடுகிறது.

விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,01:49 IST

தூத்துக்குடி : தூத்துக்குடி மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நீர்வளத் திட்டத்தின் கீழ் செங்கோட்டையாறு உபவடிநிலப்பகுதி விவசாயிகளுக்கு அறுவடை பின்செய்நேர்த்தி பயிற்சி கவுண்டம்பட்டி கிராமத்தில் நடந்தது.கூட்டத்திற்கு கவுண்டம்பட்டி பஞ்.,தலைவர் சண்முகவேல், மேலக்கரந்தை பஞ்.,தலைவர் பாலகிருஷ்ணன், மாவல்பட்டி பஞ்., தலைவர் ஜெயவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். கோவில்பட்டி வேளாண் அலுவலர் பொன்னுராஜ் வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குநர் முருகானந்தம் உட்பட பலர் பேசினர். அவர் பேசும்போது விவசாயிகள் குழுக்களாக இணைந்து அறுவடை செய்த உளுந்தை, உளுந்து உடைக்கும் இயந்திரம் மூலம் உடைத்து விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம் என தெரிவித்தார். மேலும் விவசாயிகள் அறுவடை செய்த விளைபொருட்களை இருப்பு வைத்து, வெளிச்சந்தையில் நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறுமாறு கேட்டுக் கொண்டார். மேலும் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வழங்கப்படும் 5 சதவீத வட்டி மட்டுமே உடைய ஈட்டுக்கடன் வசதியை பயன்படுத்திக் கொள்ள முன்வருமாறும் விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

வேளாண்மை துணை இயக்குநர் சீனிவாசன் வேளாண்மை துறை திட்டங்கள் குறித்து பேசினார். ஸ்காடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் அசோக் மிளகாய் சாகுபடியில் தற்போது பயன்படுத்த வேண்டிய நவீன யுக்திகள் குறித்து பேசினார்.கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ஆனந்தராஜ் மக்காச்சோள சாகுபடி குறித்தும் கிள்ளிகுளம் வேளாண்மை கல்லூரி உதவிப் பேராசிரியர் சீனிவாசன் பயறுவகை பயிர் சாகுபடியில் எவ்வாறு மகசூலை அதிகரிப்பது என்பது குறித்தும் பேசினார். புதூர் வேளாண்மை உதவி இயக்குநர் கருப்பசாமி பயறு பயிர் சாகுபடியில் டிஏபி தெளிப்பதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கும் என தெரிவித்தார். புதூர் தோட்டக்கலை உதவி இயக்குநர் பழனி வேலாயுதம் காய்கறி சாகுபடியில் சொட்டு நீர்ப்பாசனம் குறித்தும் ஸ்காடு அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் சுமதி வேளாண் விளைபொருட்கள் எவ்வாறு மதிப்பு கூட்டுதல் செய்வது என்பது குறித்தும் பேசினார்.கோவில்பட்டி நடமாடும் வேளாண் மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் சரவணன், ஒழுங்கு முறை விற்பனை கூட கண்காணிப்பாளர் அழகுராணி, வேளாண்மை அலுவலர்கள் தாமஸ், சங்கர், ராஜா, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா, ஜோசப்ராஜ் மற்றும் சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கரன் நன்றி கூறினார். பயிற்சியில் கவுண்டம்பட்டி, மாவில்பட்டி, மேலக்கரந்தை ஆகிய கிராமத்தைச் சேர்ந்த 60 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,00:00 IST

**மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற நெல் ரகம் "அண்ணா 4'**

பரமக்குடி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வெளியிடப்பட்ட புதிய ரகம் (பரமக்குடி 4) "அண்ணா 4'. ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற ஒரு சிறந்த ரகமாகும். வயது 100-105 நாட்கள். வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. நடுத்தர உயரமும், சாயாத தன்மையும் கொண்டது. வடகிழக்கு பருவமழை காலத்தில் நேரடி விதைப்பிற்கு ஏற்ற ரகமான இது, நீண்ட சன்ன வெள்ளை அரிசி. அதிக அரவைத்திறன் (62.1 சதம்) ஆயிரம் நெல்மணிகளின் எடை 25.7 கிராம். அரவையின்போது மிகக்குறைந்த அளவே உடையும் தன்மை (6.1 சதம்), சமைக்கும்பொழுது அதிக அளவு நீளவாக்கில் விரிவடையும் திறன் (1.59:1) உடையதாக உள்ளது. மானாவாரியில் எக்டருக்கு 3.7 டன் விளைச்சலும் அதிக அளவாக 4.5 டன் விளைச்சலும் தரவல்லது.இது முந்தைய "பரமக்குடி 3' மானாவாரி நெல் ரகத்தைக் காட்டிலும் 14.7 சதம் அதிகமாகும். இலை சுருட்டுப்புழு மற்றும் குலைநோய்க்கு எதிர்ப்புத்திறனும், குருத்துப்புழு, துங்ரோ வைரஸ் நோய்க்கு மிதமான எதிர்ப்புத்திறனும் உடையது.

**சாகுபடி நுட்பங்கள்:** பருவம்: செப்டம்பர்-அக்டோபர், விதை அளவு 75 கிலோ/எக்டர், நேரடி புழுதிக்கால் விதைப்பு; விதை நேர்த்தி: டிரைகோடெர்மா விரிடி 4 கிராம்/கிலோ 3 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம், விதைத்த 25-30ம் நாளில் நன்கு மழை பெய்யும் தருணத்தில் நெல் செடிகளைக் கலைத்து நிரப்பும்போது ஒரு சதுர மீட்டருக்கு 80 முதல் 100 செடிகள் இருக்க வேண்டும்.

**உரமும் அளவும்:** எக்டருக்கு தழைச்சத்து 50 கிலோ, மணிச்சத்து 25 கிலோ மற்றும் சாம்பல் சத்து 25 கிலோ அளவில் இடவேண்டும். விதைப்பு வயலுக்கு உயிர் உரமிடுதல்: எக்டருக்கு 10 பொட்டலம் அசோஸ்பைரில்லம், 10 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியா, 25 கிலோ தொழு உரம், 25 கிலோ மணல் கலந்து தூவ வேண்டும்.

**அடியுரம்:** ஊட்டமேற்றிய தொழு உரம் 750 கிலோ அல்லது 25 கிலோ மணிச்சத்து தரக்கூடிய உரத்தை விதைக்கும்பொழுது சாலில் இடவேண்டும்.

**களைக்கொல்லி:** விதை முளைத்த 3ம் நாள் பூட்டாகுளோர் 2.5 லிட்டர்/எக்டர் அல்லது பெண்டியதாலின் 3 லிட்டர்/ எக்டர், அத்துடன் கைக்களை 30-37 நாட்களில் எடுக்க வேண்டும்.

**மேலுரம்:** எக்டருக்கு தழைச்சத்து 50 கிலோ, சாம்பல் சத்து 25 கிலோ ஆகியவற்றை இரு சமபாகமாக பிரித்து பயிர் முளைத்த 20-25 மற்றும் 40-45 நாட்களில் இடவேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:** ஒருங்கிணைந்த முறையை கடைபிடிக்க வேண்டும். நெல் சிலந்திப்பேன் - டைக்கோபாஸ் 100 மிலி/எக்டர். மாவுப்பூச்சி, இலைச் சுருட்டுப்புழு - பாஸ்போமிடான் 500 மிலி/எக்டர்; குருத்துப்பூச்சி - புரோபினோபாஸ் 50 இசி 1000 மிலி / எக்டர் அல்லது

பாஸ்போமிடான் 500 மிலி/எக்டர்; புகையான், வெண் முதுகு தத்துப்பூச்சி - பாஸ்போமிடான் 40 (எஸ்சி) 100 மிலி/எக்டர் அல்லது கார்பரில் 50 (டபிள்யூபி) 1 கிலோ/எக்டர்; இலைப்புள்ளி நோய், கதிர் உறை அழுகல் நோய், இலை உறை கருகல் நோய்- கார்பென்டாசிம் 250 கிராம்/எக்டர்; குலைநோய் - கார்பென்டாசிம் 250 கிராம்/எக்டர் அல்லது டிரைசைக்குளோர்சோல் 75% (டபிள்யூபி) 500 கிராம்/எக்டர் அல்லது மான்கோசெப் 1000 கிராம்/எக்டர். மேலும் விபரங்களுக்கு: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி-623 707. 04564-222 139.தகவல்: ப.யோகமீனாட்சி, ச.செந்திவேல், வேளாண் ஆராய்ச்சி நிலையம், பரமக்குடி-623 707.

**"மண்பானை செடித்தைலம்"**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,00:00 IST

கன்னியாகுமரி மாவட்டம், கோழிக்கோடு பொதையைச் சார்ந்த விவசாயிகளிடையே பூச்சி விரட்டி மற்றும் பயிர் வளர்ச்சிக்குரிய உருவகங்கள் பாரம்பரியமாக இருந்துள்ளது. அவ்வாறான பாரம்பரிய முறையான, "மண்பானை செடித் தைலம்' செடிகள் வளர்ச்சிக்கு தேவையான சத்தினை தருவதுடன் பூச்சி விரட்டியாகவும் செயல்படுகிறது.

**இந்த தைலத்தை தயாரிக்க தேவையானவை:** வேம்பு, எருக்கு, நொச்சி ஆகியவை சுமார் 50 கிராம் பொடி செய்த பயறுவகைகள் (ஏதேனும் ஒரு பயறு), 1 லிட்டர் தயிர் அல்லது அடர்த்தியான மோர், 1.5 லிட்டர் தண்ணீர் ஆகியவையாகும். முதலில் இலைகளை நன்கு அரைத்து கூழாக்கிக் கொள்ளவும். அதை அரைத்து வைத்துள்ள பயிர் பொடியுடன் கலக்கவும். பின் தயிர் மற்றும் தண்ணீருடன் இவ்விழுதை நன்கு கலக்கவும். இதை ஒரு மண் பானையில் வைத்து, அதன் வாயை ஒரு துணியைக் கொண்டு மூடிவிட வேண்டும். பின், ஒவ்வொரு நாளும் இதை இடமிருந்து வலமாகவும், வலமிருந்து இடமாகவும் கலக்க வேண்டும். இவ்வாறு 15-20 நாட்களுக்கு பிறகு, இந்த தைலத்தினை பயன்படுத்தலாம். ஒரு ஏக்கர் நிலத்திற்கு இந்த தைலத்தினை 20 லிட்டர் தண்ணீரில் கரைத்து, இலைகளின் மீது தெளிக்க வேண்டும். இதனை தெளிக்கும் நேரம் மிக முக்கியமானது. அதிகாலை நேரத்திலும், அந்தி சாயும் மாலையிலும் இதை தெளிக்க சிறந்ததாகும். இதை தெளிப்பதன் மூலம் பல பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டு, செடிக்கு நல்ல ஊட்டச்சத்து தருவதுடன் பயிர் வளர்ச்சியையும் அளிக்கிறது. இயற்கை இடுபொருட்கள் பல்வேறு பயன்களை தரவல்லது. இது இடுபொருள் செலவினை குறைப்பதுடன், சுற்றுச்சூழல் மாசடைவதை தடுக்கிறது. "ரசாயன உரங்களை உபயோகிக்கும் நிலத்தினையும் இயற்கை இடுபொருட்களான பஞ்சகாவ்யா, மண்புழு உரம் போன்றவற்றை உபயோகிக்கும் நிலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் இயற்கை உரம் உபயோகிக்கும் நிலத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கையில், இயற்கை

உரம் உபயோகித்த நிலத்தில் அதிக மண்புழு, எறும்பு, மரவட்டை போன்ற உயிரிகள் காணப்படும் என்று அரவிந்தன் விளக்குகிறார். பயனுள்ள உயிரிகள்: விவேகானந்தா நிலையத்தின் மூலம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் பலதரப்பட்ட நிலத்தில் மண்புழு மற்றும் எறும்புகளின் இருப்பு குறித்து கணக்கிடப்பட்டது. இதன் மூலம் ரசாயன உரங்கள் உபயோகிக்கப்பட்ட நிலங்களில் தொந்தரவு செய்யப்பட்டது. சில நிலங்களில் இவ்வாறான உயிரிகள் சிறிதும் இல்லாமலும் இருப்பது கண்டறியப்பட்டது. சில விவசாயிகள் இதன் பின், இயற்கை விவசாய முறைக்கு மாறினர். இப்போது அவர்களது நிலத்தில் உயிரிகளை பார்க்க முடிந்தது.மேலும் விபரங்களுக்கு: எம்.அகமது கபீர், வேளாண்மை ஆலோசகர், 61, ஆர்.கே.ஆர்.நகர், தாராபுரம்-638 656. திருப்பூர், எம்.அகமது கபீர், 93607 48542.

**பயோடெக் பூச்சிக்கொல்லி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,00:00 IST



**என் பெயர் எஸ்.வேலுச்சாமி. த/பெ.சாமியப்ப கவுண்டர், கண்ணாபுரம் ரோடு, நத்தக்காடையூர், காங்கேயம் வழி, திருப்பூர் மாவட்டம்** என்ற முகவரியில் இருந்து அனுப்புகிறேன். 50 வருடத்திற்கு மேலான ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் பக்க விளைவாக அனைத்து பூச்சிகளும் ஏற்கனவே பெருமளவு மரபணுவிலேயே எதிர்ப்புத்தன்மை பெற்றுவிட்டதால் தற்போது உள்ள எந்த ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளும் சிறந்த பலன்தர முடிவதில்லை. எனவே, புதிய புதிய ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள் சந்தையில் வந்தவண்ணம் உள்ளன. இவையும் சில வருடங்கள் அதேஅளவில் கட்டுப்பாடு தந்து மீண்டும் அளவை அதிகரித்தால்தான் பலன் தருகிறது. விலையும் மிக அதிகமாக உள்ளது. தற்போது சந்தையில் ஏக்கருக்கு ரூ.1000/-க்கு மேல் விலை உள்ள பூச்சி மருந்துகளும் இருக்கத்தான் செய்கின்றன. சில வகை ரசாயன பூச்சிக் கொல்லிகள் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதும் உண்டு. இதனால் பயிர் பாதிப்படைவதால்

நஷ்டம் ஏற்பட வாய்ப்பாகிறது.
அளவுக்கதிகமான முறையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டால் குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த பூச்சி பயிருக்கு பெருங்கேடு விளைவித்து அதிக முக்கியத்துவம் வாய்ந்த பூச்சியாக மாறிவருகின்றன. உ.தா. மாவுப்பூச்சி என்ற கள்ளிப்பூச்சி அதிக நஞ்சுள்ள ரசாயனப் பூச்சிக்கொல்லி பயன்பாட்டால் நன்மை செய்யும் உயிரினங்கள், பூச்சியினங்கள், நுண்ணுயிர்கள், மண்புழுக்கள் அழிந்துவிட்டன. மேற்கூறிய பிரச்னைகளுக்கு இயற்கை பூச்சிவிரட்டிகள் முழுமையான தீர்வாக அமைவதில்லை. தடுப்பு முறையாகவும் மற்றும் ஓரளவு கட்டுப்பாடு மட்டுமே வழங்க முடிகிறது.
நான் புழுக்களைக் கட்டுப்படுத்தவும், பயோதண்டர் என்ற அதிநவீன பயோடெக் பூச்சிக்கொல்லியையும் சிலந்திப்பேனைக் கட்டுப்படுத்த பயோஷார்ப் என்ற அதிநவீன பயோடெக் பூச்சிக்கொல்லி பயன்படுத்தினேன். நான் ரசாயனமுறை விவசாயியாக இருந்த போதிலும் நிறுவனத்தின் ஆலோசனையில் நம்பிக்கை கொண்டு மருந்தை நிலக்கடலையில் புரொடீனியா மற்றும் இலைசுருட்டு புழுக்களுக்கு எதிராக ஏக்கருக்கு 100 மிலி என்ற அளவிலும், சம்பார் வெள்ளரி மற்றும் முலாம்பழ பயிர்களில் பச்சைப்புழுக்களுக்கு மாலை வேளையில் தெளித்தேன். என்னால் நம்ப முடியாத அளவிற்கு மறுநாள் காலை அனைத்துப் புழுக்களும் இறந்துவிட்டன. இயற்கை முறையில் புழுக்கள் இவ்வளவு சீக்கிரம் கட்டுப்பாடு அடைந்து இறந்துவிடுவது 10-12 மணி நேரங்களிலேயே முழு கட்டுப்பாடு கிடைத்தது.
வெள்ளரியில் சிலந்திபேனை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 100 மிலி என்ற அளவில் தெளித்தால் கட்டுப்பாடு கிடைக்கும். 1. அதிக நாட்கள் கட்டுப்பாடு, 2. பக்க விளைவுகள் இல்லாதது. 3. மருந்து தெளித்தவுடன் காய் பறித்தாலும் விஷத்தன்மை இல்லாதது. 4. ஏக்கருக்கு வெறும் 100 மிலி என்ற குறைந்த அளவு. 5. தற்போதுள்ள மருந்துகளை ஒப்பிடும்போது விலையும் மிகவும் குறைவு. 6. நன்மை செய்யும் பூச்சிகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதுகாப்பானது என பல சிறப்புகள் என்னை கவர்ந்தது.
பூச்சிகளின் அடுத்த கட்ட வளர்ச்சி நிலைக்கு தேவைப்படும் கைட்டினேஸ் என்ற என்சைமை கட்டுப்படுத்துவதன் மூலம் பூச்சிகளின் ஒட்டுமொத்த வாழ்க்கைச் சுழற்சியுமே கட்டுப்படுத்தப்படுவதால் தொடர்ந்து தெளிக்கும்போது படிப்படியாக பூச்சிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை வயலில், தோட்டத்தில் குறைந்துவிடுகிறது. எனவே 2 தெளிப்புகளுக்கு இடையே இடைவெளியை அதிகப்படுத்தலாம். தொடர்புக்கு: ஜெய்சங்கர், கோயம்புத்தூர்-18. 94878 01515, 94879 01515. -கே.சத்தியபிரபா, 96591 08780.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 29,2010,00:00 IST



**வெட்டிவேர்**: புல்-நாற்று, வளர்ப்பு முறை மற்றும் ஆலோசனைகளுக்கு: சி.பாண்டியன், சி.எம்.விவசாயப்பண்ணை, குருவாடிப்பட்டி, சுண்டைக்காடு (அஞ்சல்), திருப்பத்தூர் தாலுகா, சிவகங்கை. 93629 49176.

**அதிவேக தூளாக்கும் இயந்திரங்கள்:** கரும்பு, தீவன புல் போன்ற கடினமான தீவனங்களை அதிக வேகத்துடன் வெட்டும். மக்காச்சோளம், கம்பு, கோதுமை போன்றவற்றை சில நொடிகளில் அரைத்து மாவாக்கலாம். தென்னை மட்டை, வாழைமரம், மரக்கிளைகள், புண்ணாக்கு, வேப்பங்கொட்டை ஆகியவற்றை தூளாக்குவது இதன் தனி சிறப்பாகும்.

**தொடர்பு முகவரி: தும்மா அக்ரோ டெக்னாலஜீஸ், 37ஏ, ராஜேந்திரன் ரோடு, பழநி, திண்டுக்கல்- 624 601. 98433 35703, 94433 35703, 04545-235 703.**

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழ்நாட்டில் உணவுபதப்படுத்தலுக்கு தனி அமைச்சகம் மத்திய மந்திரி சுபோத் காந்த் சகாய் வேண்டுகோள்

சென்னை, செப்.29–
உணவு பதப்படுத்தலுக்கு தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய மந்திரி சுபோத் காந்த் சகாய் வேண்டுகோள் விடுத்தார்.

மாநாடு

வேளாண்வர்த்தகம் மற்றும் உணவுபதப்படுத்துதல் பற்றிய 2 நாள் சர்வதேச மாநாடு சென்னை தியாகராயநகரில் நேற்று நடைபெற்றது. இந்திய தொழில் மற்றும் வணிக சபைகளின் கூட்டமைப்பின் தமிழ்நாடு மாநில கவுன்சில் தலைவர் எம்.ரபீக் அகமது வரவேற்று பேசினார்.

நகரமயமாதல், வாழ்க்கை முறை மாற்றம் வருமான உயர்வு ஆகியவற்றின் காரணமாக இந்தியாவில் உணவுப்பொருள் அதிகம் தேவைப்படுகிறது. எனவே உணவு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு நிறைய தேவைப்படுகிறது. உணவு தானியங்கள் விளையும் வயலில் இருந்து சாப்பிடும் வரை அவற்றை பாதுகாக்க போதுமான ஒருங்கிணைப்பு இல்லை. உணவுபொருட்களை பதப்படுத்த புதிய தொழில்நுட்பங்கள் பற்றியும் உணவுபொருள் பாதுகாப்பு பற்றியும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று ரபீக் அகமது தெரிவித்தார்.

இந்திய தொழில் மற்றும் வணிக சபைகளின் கூட்டமைப்பு தலைவரின் ஆலோசகர் பி.முராரி பேசியதாவது:–

முன்னேறும் தமிழ்நாடு

தமிழ்நாடு பொருளாதாரத்தில் மிக வேகமாக வளர்ந்து வரும் மாநிலமாக விளங்குகிறது. அதற்கு காரணம் அந்நிய முதலீட்டை அதிகம் பெறுகிறது. உணவு பதப்படுத்தலில் சிறந்து விளங்குகிறது. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறைய உள்ளன. இதன் காரணமாக தமிழ்நாடு உணவு மற்றும் வேளாண் பொருள் ஏற்றுமதியில் பெரிய அளவில் முன்னேற்றத்தை காண உள்ளது. மத்திய அரசும் உணவு பதப்படுத்துதல் துறைக்கு பல பயன்மிகு காரியங்களை செய்து வருகிறது. எனவே இந்திய அளவிலும்

உணவுபதப்படுத்துதல் துறை முன்னேற்றம் காணும்.
இவ்வாறு முராரி பேசினார்.
மத்திய உணவு பதப்படுத்தும் தொழில் துறை மந்திரி சுபோத் காந்த் சகாய் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி மாநாட்டை தொடங்கி வைத்து மாநாட்டு மலரை வெளியிட்டார். மாநாட்டையொட்டி ஊறுகாய் உள்ளிட்ட உணவு பதப்படுத்தப்பட்ட பொருள்களின் கண்காட்சியையும் திறந்து வைத்து பேசியதாவது:–
தென்இந்தியாவில் உணவு பதப்படுத்தும் தொழில் சிறப்பாக உள்ளது. இருப்பினும் சிறிய அளவில் பாக்கெட் செய்து அதை பாதுகாத்தால் போதாது. பெரிய அளவில் பாக்கெட் போட்டு அவற்றை நீடித்த நாட்கள் இருக்கச்செய்யவேண்டும்.
கடல் சார் உணவு பொருட்களும் நிறைய அளவில் பதப்படுத்தப்படவேண்டும்.
தமிழ்நாட்டில் தனித்துறை
ஒவ்வொரு மாநிலமும் உணவுப்பொருட்களை பதப்படுத்த தனி கொள்கை ஏற்படுத்த வேண்டும். உணவுப்பொருள் பதப்படுத்துதலுக்கு தமிழ்நாட்டில் தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும்.
இவ்வாறு மந்திரி சுபோத் காந்த் சகாய் பேசினார்.
மலேசிய வர்த்த ஆணையர் ஸைனுத்தின் ஏ.ஜலில், தாய்லாந்து துணை தூதர் பைசன் மரப்ரிக்சவான், ஆச்சி குரூப் கம்பெனிகளின் தலைவர் ஏ.டி.பத்மசிங் ஐசக், சி.எம்.டி.ஆர்.ஐ. இயக்குனர் வி.பிரகாஷ், இந்திய தொழில் மற்றும் வணிக சபைகள் கூட்டமைப்பின் தமிழ்நாடு கவுன்சில் துணை இயக்குனர் எஸ்.சரவணன் உள்பட பலர் பேசினார்கள்.

## ‘எய்ட்ஸ் நோயை குணப்படுத்தும் ஆற்றல் முருங்கை கீரைக்கு உண்டு’ வேளாண் விஞ்ஞானி தகவல்

கோவை, செப்.29–
எய்ட்ஸ் நோயை குணப்படுத்தும் ஆற்றல் முருங்கை கீரைக்கு உண்டு என்று வேளாண் விஞ்ஞானி எச்.பி.சிங் தெரிவித்தார்.
கருத்தரங்கு
கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் முருங்கை சாகுபடி குறித்த கருத்தரங்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கினார். ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா வரவேற்றார்.

டெல்லி இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழு தோட்டக்கலை துணை இயக்குனர் எச்.பி.சிங் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–இந்தியாவை தாயகமாக கொண்ட முருங்கை கீரை உலகின் ஆச்சரியப்பட வைக்கும் பயிர்களின் ஒன்றாக திகழ்கிறது. உலக அளவில் இந்தியா முருங்கை உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ளது. சுமார் 38 ஆயிரம் எக்டேர் பரப்பளவில் 1.1 மில்லியன் முதல் 1.3 மில்லியன் டன்கள் வரை முருங்கை உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆந்திர மாநிலம் முருங்கை உற்பத்தியில் முதல் இடத்திலும், கர்நாடகா மற்றும் தமிழ்நாடு முறையே 2–ம் இடத்திலும் உள்ளன. 2 சதவீத முருங்கை இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

எய்ட்ஸ்–சர்க்கரை நோய்

முருங்கை கீரையின் சிறப்பு தன்மையை கருத்தில் கொண்டு அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட ரகங்களை உருவாக்கும் முயற்சியில் பல்வேறு நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. கோவை வேளாண் பல்கலைக்கழகம் சார்பில் வெளியிடப்பட்ட பி.கே.எம்–1 மற்றும் பி.கே.எம்–2 என்ற செடி முருங்கைகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவையாக விளங்கி வருகிறது. முருங்கை கீரை எய்ட்ஸ் மற்றும் சர்க்கரை நோய்களை குணப்படுத்தும் ஆற்றல் கொண்டது என கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

முருங்கை பராமரிப்பு, மேலாண்மை மற்றும் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்களை பற்றிய ஆய்வுகளிலும் வேளாண் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## வெங்காயம் ஏற்றுமதியை கட்டுப்படுத்த அரசு திட்டம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி

வெங்காயம் விலை மேலும் உயராமல் தடுக்கும் வகையில் ஏற்றுமதியை கட்டுப்படுத்த மத்திய அரசு நடவடிக்கைமேற்கொண்டு வருகிறது. அக்டோபர் மாதத்தில் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை டன் ஒன்றிற்கு 75 டாலர் உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதனையடுத்து இதற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 425 டாலராக உயர்ந்து விடும். சென்ற செப்டம்பர் மாதத்தில் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை 350 டாலராக இருந்தது.

விலை உயர்கிறது

தற்போது உள்நாட்டில் வெங்காயம் விலை உயர்ந்து வருகிறது. இந்தியாவில் மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நாசிக்கிற்கு அருகில் உள்ள லாசல்கான் சந்தை, வெங்காயம் விற்பனையில் ஆசியாவின் மிகப்பெரிய சந்தையாகும். இச்சந்தையில் ஒரு மாதத்திற்கு முன் ஒரு குவிண்டால் (100 கிலோ) வெங்காயத்தின் மொத்த விலை ரூ.1,000–ஆக இருந்தது இது, தற்போது சுமார் 80 சதவீதம் அதிகரித்து ரூ.1,800–ஆக உயர்ந்துள்ளது.

சென்னை நகரில் கடந்த மூன்று மாதங்களில் இதன் விலை 58 சதவீதம் அதிகரித்துள்ளது.பெங்களூரில் 110 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே காலத்தில் கொல்கத்தாவில் 140 சதவீதமும், புதுடெல்லி மற்றும் மும்பை ஆகிய நகரங்களில் முறையே 108 சதவீதம் மற்றும் 90 சதவீதம் விலை உயர்ந்துள்ளது.

ஏற்றுமதி

ஆக, உள்நாட்டில் விலை உயர்வை தடுக்க வெங்காயம் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலை உயர்த்தப்படுகிறது. இந்த விலைக்கு குறைவாக நிறுவனங்கள் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. இதனால் ஏற்றுமதி குறைந்து, உள்நாட்டில் போதுமான அளவில் வெங்காயம் கிடைக்கும் என்ற அடிப்படையில் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை உயர்த்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் ஆகஸ்டு வரையிலான எட்டு மாத காலத்தில் நாட்டின் வெங்காயம் ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே காலத்தைக் காட்டிலும் 50 சதவீதம் சரிவடைந்து 1.86 லட்சம் டன்னிலிருந்து 87,400 டன்னாக குறைந்துள்ளது.

## முதல் ஆறு மாதங்களில் 2 லட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்ய ஒப்பந்தம்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாத காலத்தில் இரண்டு லட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்து கொள்ளும் வகையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேசமயம், சென்ற முழு நிதி ஆண்டில் 1,58,000 டன் அளவிற்கு கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது என இந்திய மாவு ஆலைகள் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.கே.கர்க் தெரிவித்தார்.

இதுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள கோதுமையின் விலை டன் ஒன்றிற்கு 280–285 டாலர் என்ற அளவில் இருந்தது. ஆனால் உலக அளவில் கோதுமை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள ரஷ்யாவில் ஏற்பட்ட கடும் வறட்சி மற்றும் அந்நாட்டின் காடுகளில் ஏற்பட்ட தீ போன்றவற்றால் ரஷ்யாவின் கோதுமை உற்பத்தி மிகவும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. இந்தநிலையில் சர்வதேச சந்தையில் ஒரு டன் கோதுமையின் விலை 370 டாலராக அதிகரித்துள்ளது. எனவே, இந்த விலையில் இறக்குமதி செய்து கொள்வது தவிர்க்கப்பட்டு வருகிறது.

உலக அளவில் கோதுமை உற்பத்தியில் இந்தியா இரண்டாவது மிகப்பெரிய நாடாக உள்ளது. சென்ற 2009–10–ஆம் பருவத்தில், உள்நாட்டில் 8.07 கோடி டன் கோதுமை உற்பத்தியானது. நடப்பு 2010–11–ஆம் வேளாண் பருவத்தில் கோதுமை உற்பத்தி 8.20 கோடி டன்னாக இருக்கும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நவம்பர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி 95 லட்சம் டன்னாக உயரும்



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*எதிர்வரும் 2010–11 எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) நாட்டின் தாவர எண்ணெய் இறக்குமதி 95 லட்சம் டன்னாக உயரும் என இத்துறையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் தெரிவித்தனர். நடப்பு பருவத்தில் இது, 90 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*பத்து மாதங்களில்...*

*தாவர எண்ணெய் என்பது சமையல் எண்ணெய் வகைகளையும், இதர பயன்பாட்டு எண்ணெய் வகைகளையும் பொதுவாக குறிக்கிறது. நடப்பு பருவத்தின் முதல் பத்து மாதங்களில் (நவம்பர்–ஆகஸ்டு) 74.47 லட்சம் டன் தாவர எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய எண்ணெய் பருவத்தின் இதே காலத்தை விட 5 சதவீதம் அதிகமாகும்.*

*எதிர்வரும் புதிய பருவத்தில் பாமாயில் 72 லட்சம் டன்னும், சோயா எண்ணெய் 15 லட்சம் டன்னும், சூரியகாந்தி எண்ணெய் நான்கு லட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்படும். இதர எண்ணெய் வகைகளின் இறக்குமதி ஒட்டுமொத்தத்தில் நான்கு லட்சம் டன்னாக இருக்கும் என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 2000–01–ஆம் ஆண்டு பருவத்துடன் ஒப்பிடும்போது, தற்போது நம் நாட்டில் சமையல் எண்ணெய் பயன்பாடு 6.5 சதவீதம் உயர்ந்து 1.47 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இது, 2015–ஆம் ஆண்டில் 2 கோடி டன்னாக உயரும் என ரேபோ*

இந்தியா ஃபைனான்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆகஸ்டு இறக்குமதி

சென்ற ஆகஸ்டு மாதத்தில், நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 64 சதவீதம் அதிகரித்து 10.65 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பு செப்டம்பர் மாதத்தில் 7 லட்சம் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, நடப்பாண்டு பண்டிகை காலத்தில் சமையல் எண்ணெய் விலை குறைய வாய்ப்புள்ளது. இந்தியாவில் ஆண்டுக்கு 80 லட்சம் டன் சமையல் எண்ணெய் உற்பத்தி ஆகிறது. அதேசமயம், சமையல் எண்ணெய் பயன்பாடு 1.60 கோடி டன்னாக உள்ளது. இது, உற்பத்தியைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகும்.நம் நாடு அதன் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. எனவே, சர்வதேச அளவில் இதன் விலை உயரும்போது அது இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

உற்பத்தி மதிப்பீடு

இந்தியாவின் சமையல் எண்ணெய் உற்பத்தி, நடப்பு எண்ணெய் பருவத்தில் (நவம்பர்–அக்டோபர்) 70 லட்சம் டன்னாக உயரும் என்று அமெரிக்க வேளாண் துறை முன்னறிவிப்பு செய்துள்ளது. இது, வரும் 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில், 13 சதவீதம் உயர்ந்து 79.10 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்றும் தெரிவித்துள்ளது. குறிப்பாக, எதிர்வரும் பருவத்தில், கடுகு எண்ணெய், சோயா எண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. சமையல் எண்ணெயைப் பொறுத்தவரை, நம் நாடு கடந்த 1994–95–ஆம் ஆண்டு பருவத்தில் 5 சதவீதமே இறக்குமதியை சார்ந்திருந்தது. இது, தற்போது 50 சதவீதமாக உயர்ந்துள்ளது என சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 2009–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த பருவத்தில் ரூ.28,000 கோடிக்கு சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 10 ஆண்டுகளில் உள்நாட்டில் சமையல் எண்ணெய்க்கான பற்றாக்குறை 1.77 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## ஊட்டியில்

# ஆப்பிள், சாத்துக்குடி விற்பனை அமோகம்

ஊட்டி, செப்.29–
ஊட்டியில் தற்போது ஆப்பிள், சாத்துக்குடி பழங்கள் விற்பனைக்கு அதிகளவில் கொண்டு வரப்பட்டு, குவிக்கப்பட்டுள்ளன.

### பழங்கள்

நீலகிரி மாவட்டத்தில் பிளம்ஸ், பேரிக்காய், மங்குஸ் தான் உள்பட பல்வேறு பழங்கள் விளைகின்றன. இதில் ஒரு சில இடங்களில் ஊட்டி ஆப்பிள் விளைவிக்கப் படுகிறது.

இது தவிர மற்ற பழங்கள் வட மாநிலங்களில் இருந்தும், சமவெளிபகுதிகளில் இருந்தும் ஊட்டிக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. ஆப்பிள், சாத்துக்குடி, மாதுளை, கொய்யா உள்பட பல்வேறு கனிகள் தற்போது விற்பனைக்கு வந்து குவிந்து உள்ளன. இதில் ஆப்பிள், சாத்துக்குடி போன்ற பழங்களின் விலை சற்று குறைவாக உள்ளதால் மக்கள் அதிகம் விரும்பி வாங்கி செல்கிறார்கள்.

### நடைபாதை கடைகள்

எப்போதும் பழங்கள் ஊட்டி மார்க்கெட்டில் உள்ள பழக்கடைகளில் தான் விற்பனை செய்யப்பட்டு வந்தன. தற்போது ஆப்பிள், சாத்துக்குடி போன்றவற்றின் விலை குறைவாக உள்ளதால் சாலை யோரங்களிலும், நடைபாதைகளிலும் புதிது, புதிதாய் பழக்கடைகள் முளைத்துள்ளன. தள்ளு வண்டிகளில் வைத்தும் ஆப்பிள் விற்பனை செய்யப் படுகிறது.

இது குறித்து ஊட்டி மார்க்கெட் என்.எஸ்.எச். பழக்கடை வியாபாரி ஷேக் கூறியதாவது:–

தற்போது இமாச்சல பிரதேசத்தில் இருந்தும், காஷ்மீரில் இருந்தும் அதிக அளவில் ஆப்பிள் விற்பனைக்கு வருகிறது. இமாச்சல பிரதேசத்தில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது. அதே நேரத்தில் அங்கு கன மழை பெய்துள்ளதால் ஆப்பிள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

### அமோக விற்பனை

கடந்த மாதங்களில் ஒரு கிலோ ரூ.100, ரூ.80க்கு ஆப்பிள் பழங்கள் விற்பனை செய்யப் பட்டது. தற்போது ஒரு கிலோ ரூ.60க்கு விற்பனை செய்யப் பட்டு வருகிறது. இதன் விலை இன்னும் குறைய வாய்ப்புகள் உள்ளது. அதேபோல் சாத்துக்குடி வரத்தும் அதிகரித்துள்ளது. தற்போது ஒரு கிலோ சாத்துக்குடி ரூ.30க்கு விற்பனை செய்யப்படுகிறது. விலை குறைந்து உள்ளதால் இதனை பொதுமக்களும், சுற்றுலா பயணிகளும் அதிகளவில் விரும்பி வாங்கி செல்கிறார்கள். இதனால் ஆப்பிள், சாத்துக்குடி விற்பனை அமோகமாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



ஊட்டி மார்க்கெட்டில் ஒரு கடையில் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ள ஆப்பிள்.



விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டுள்ள சாத்துக்குடி பழங்கள்.